**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.**

**O.S.No.578/2022** **நாள்: 31.08.2023**

**வா.சா.1**

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணைவாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.ஜெயகிருஷ்ணன் | சாதி | .. | |
| த–பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலூகா | .. | | வயது | .. | |

முதல் விசாரணை – நான் வாதி வங்கியின் வங்கி கிளை மேலாளர். வாதி தரப்பு 1ம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை எழுத்து மூலமாக நிரூபண வாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. 29.01.2019 ம் தேதியிட்ட கடன் விண்ணப்பம் அசல் **வாசாஆ.1**. 08.02.2019 ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் அசல் **வாசாஆ.2.** 22.02.2019 ம் தேதியன்று பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த புரோநோட்டு அசல் **வாசாஆ.3.** 22.02.2019 ம் தேதியிட்ட கடன் உறுதிமொழி கடிதங்கள் அசல் **வாசாஆ.4.** 22.02.2019 ம் தேதியிட்ட கடன் ஒப்பந்த பத்திரம் அசல் **வாசாஆ.5.** 22.02.2019 ம் தேதியிட்ட கடன் உறுதிபடுத்தல் கடிதம் அசல் **வாசாஆ.6.** 22.02.2019 ம் தேதியிட்ட கருதுகோள் ஒப்பந்த பத்திரம் அசல் **வாசாஆ.7.** 21.02.2022 ம் தேதியன்று வாதி வங்கி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வாசாஆ.8.** அதனை பிரதிவாதி சார்பில் பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வாசாஆ.9.** 05.09.2022 ம் தேதியிட்ட பிரதிவாதியின் வங்கி கடன் கணக்கு பட்டியல் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வாசாஆ.10.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால்
சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சியிடம் படித்துக் காட்டி
"சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

கூடுதல் சார்பு நீதிபதி,
திருவில்லிபுத்தூர்.